# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.149/2025

**PW: 1**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.ராஜாராம் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு.அனந்தராமன் | Calling : | LW1 |
| Village : | கும்பகோணம் | Age : | 44 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 03rd day of March 2026.

Signature of Witness.

(Accused Present. Additional Public Prosecutor Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் கும்பகோணத்தில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். 20.01.2025 அன்று கும்பகோணம் வட்டிப்பிள்ளையார்கோயில் அருகே மதியம் 12.00 மணியளவில் எனது தாயார் மாலாவிற்கு விபத்து நடந்ததாக போன் செய்து தகவல் சொன்னார்கள். நான் ரயில்வே ஸ்டேஷன் சவாரியில் இருந்தேன். நான் உடனே கும்பகோணம் சுகம் மருத்துவமனைக்கு சென்றேன். என் அம்மாவிற்கு தலையில் அடிப்பட்டிருந்தது. அங்கே அவர் அபாய கட்டத்தில் இருப்பதாக சொல்லி திருச்சி காவேரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கே அவர்கள் தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து போக சொன்னார்கள், மருத்துவமனைக்கு செல்லும் வழியில் அவருக்கு உடல் நிலை மோசமாக இருந்ததால் வீட்டிற்கு அழைத்துபோக

முயன்றபோது செல்லும் வழியிலேயே 21.01.2025 அன்று விடியற்காலை 2.00 மணிக்கு இறந்து விட்டார். இது சம்மந்தமாக புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது. அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரேதத்தை உடல்கூராய்வு செய்வதற்காக புகார் கொடுத்தேன், யார் எழுதினார்கள், என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது முன்விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தைதான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam*